ஜூலை 2019

# CDM Kampung-Ku Connection



# ***கருபொருள் : தாய்மார்களுக்கான மரியாதை– தொட்டிலை ஆட்டும் கைகள்***

**ஆரம்ப செபம் :** அன்பு இறைவா உம்முடைய புதிய உடன்னடிக்கையின் மக்களாக எங்களை ஒன்றுகூட்டியுள்ளீர், எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து, உமது அன்பு மகன் அவரின் இரத்தத்தால் எங்களை முத்திரையிட்டும். நீர் எங்களை விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பின் சமூகமாக உருவாக்கினீர்.

தந்தையே, உமது மகிமையான பிரசன்னத்திற்காக ஏங்குகிற ஒவ்வொரு இதயத்தையும் நிரப்பி, இந்த குழுவுடன் நம்பிக்கையுடனும் திறந்த மனதுடனும் பகிர்ந்துகொள்ள எங்களுக்கு இன்று ஆற்றலை தந்தருளும். எங்கள் வீடுகளையும் எங்கள் குடும்பத்தினரையும் எங்கிருந்தாலும் நீர் அவர்களை ஆசீர்வதியும். இச்செபத்தை இயேசு கிறிஸ்துவின் வழியாக மன்றாடுகிறோம். ஆமென்.

***ஒரு அன்பான நெருக்கமான குடும்பத்தின் மகிழ்ச்சி***



**https://youtu.be/oq46iwkQJp4 (2.42mins) - Mary models mothers' strength- Pope Francis and/or**

**https://youtu.be/FJ4pW4v_MKQ (2.19mins) - The importance of mom in our life**

**வாசிக்க** : இந்த ஜூலை மாதத்தை, நாம் தாய்மார்களுக்கு சமர்ப்பிப்போம், “தொட்டில் ஆட்டும் கைகள் இந்த உலகத்தை ஆளும் கைகள்” வில்லியம் ரோஸ் வல்வஸ் அவர்களின் கவிதையில் இருந்து, தனது குழந்தைகளின் மனதில் தாக்கங்களை உருவாக்கும் ஒரு முக்கிய சக்கியாக இருக்கும் தாய்மையை போற்றுவோம், இதனால் எதிர்கால சந்ததியினரை உருவாக்குகிறார்கள். ஒரு பெண் தன் இயல்பால் தாய். ஒவ்வொரு பெண்ணும், திருமணமானவர்களாக இருந்தாலும் திருமணமாகாதவர்களாக இருந்தாலும், உயரியல், உளவியல் அல்லது ஆன்மீக தாயாக அழைக்கப்படுகிறார்கள். கொடுக்கவும், வளர்க்கவும், மற்றவர்களை கவனிக்கவும், அவர்களுக்காக அவதிப்பவதற்கும் அவள் உள்ளுணர்வாக அறிந்திருக்கிறாள்.
ஒரு தாயாக இருப்பது என்பது நீங்கள் எவ்வளவு தூரம் செல்லமுடியுமோ அந்த அளவிற்கு நீங்கள் சென்று காட்ட வேண்டும். “அது மட்டும் தான் என்னிடம் இருக்கிறது, அது என் இரத்தம், என் இதயம் என் எலும்பு” என்று சொல்கிறோம். ஒரு தாய் ஓய்வெடுக்க விருப்பும்போது, அவள் அதிக மனம் திறந்தவள், அதிக சுய வெறுமை, அதிக பொறுமை, அதிக வேலை, அதிக விடுப்பு, அதிக அன்பு என்று அழைக்கப்படுகிறாள்.

ஆசீர்வதிக்கப்பட்ட அன்னை மரியாளைவிட தாய்மையில் சிறந்த மறுவடிவமாக யார் இருக்க முடியும்ஸ்ரீ அன்னை மரியாளுடனான எங்கள் தொடர்பு பற்றி புனிதர் லூயிஸ் டி மான்ட்ஃபேர்ட் அழகான வார்த்தைகளைக் கொண்டுள்ளார். “கடவுளின் உண்மையான பிள்ளைகள் அனைவரும் தங்கள் தந்தைக்காக கடவுளையும், தங்கள் தாய்க்காக அன்னை மரியாளையும் வைத்திருக்கிறார்கள்; தன் தாய் அன்னை மரியாள் இல்லை என்று எவன் நினைக்கிறானோ, அவன் தந்தை கடவுள் இல்லை”.

பகிர்வு :

1. இன்றைய உலகில் தாய்மார்கள் குறிப்பாக இளம் தாய்மார்கள் எதிர்கொள்ளும் சவால்கள் யாவை? நீட்டிக்கப்பட்ட குடும்பம், தேவலய குழுக்கள் மற்றும் சமூக ஊடகங்களிடமிருந்து போதுமான ஆதரவு உள்ளதா?

2. உங்கள் தாய்மார்களின் நாட்களுடன் ஒப்பிடும்போது கத்தோலிக்க தாயாக இருப்பது இப்போது வேறுப்பட்டுள்ளதா?

3. உங்கள் தாயால் வழங்கப்பட்ட உங்களுக்கு பிடித்த மறக்க முடியாத நினைவு அல்லது பாரம்பரியம் என்ன? (குறிப்பாக கத்தோலிக்க நம்பிக்கை மற்றும் பாரம்பரியத்தை கடைப்பிடிப்பதில்?)

4. வீட்டிலோ, தேவலயத்திலோ, பள்ளியிலோ ஒரு சிறிய வழியில், தனிநபர்களாகவோ அல்லது ஒரு குழுவாகவோ நாம் எவ்வாறு ஆதரிக்கவும் ஊக்குவிக்கவும் முடியும்?

- சிந்தனைக்கு உணவு – வீட்டிற்கு எடுத்துச் செல்ல செய்தி.......

அடுத்த முறை உணவத்திலோ, ஷாப்பிங் மலிலோ அல்லது தேவாலயத்திலோ குழந்தை அழுவதை கேட்கும்போது, எரிச்சல் அல்லது கோபத்தின் தோற்றத்தை கைவிடவும். அந்த குழந்தையை வீட்டிலிருந்து வெளியே கொண்டு வர அம்மா எவ்வளவு முயற்ச்சி செய்கிறார் என்பது கடவுளுக்கு மட்டுமே தெரியும். நமது ஒரு ஊக்கமளிக்கும் பார்வை அல்லது புன்னகை அவளுக்கு தன்னிலும் மற்றவர்களிடமும் மீண்டும் நம்பிக்கையை உறுதிப்படுத்த உதவும்.

***இறுதி செபம் :*** பரலோக தந்தையே, எங்கள் தாய்மார்கள், எங்கள் பாட்டி மற்றும் அத்தைகள் ஆகியோருக்காக நாங்கள் உம்மை புகழ்ந்து உமக்கு நன்றி சொலுத்துகிறோம்.

இயோசுகிறிஸ்துவின் தாயான மரியாள், மிகவும் கிருபையுள்ள ஒரு தாய். நாம் அனைவருக்கும் தாய்மையின் முன்மாதிரியான பெண்ணுக்காக உமக்கு நன்றி. இன்று நாம் என்னவாக இருக்க வேண்டும் என்று நம்மை வளர்த்த அனைத்து தாய்மார்கள், பாட்டி, அத்தைகள் மற்றும் அனைத்து பெண்களின் இதயங்களுக்கும் எங்கள் செபம் சென்றடைவதாக. அவர்கள் நேசிக்கப்படிகிறார்கள், விலைமதிப்பற்றவர்கள் மற்றும் அவர்களின் அழைப்பில் அவர்கள் தகுதியானவர்கள் என்று அவர்கள் அறிந்து கொள்ளட்டும்.

உலகெங்கும் உள்ள எல்லா தாய்மார்களின் உள்ளத்திலும் ஒரு தாய் என்று அழைக்கப்படுவதன் மகிழ்ச்சியையும், அவர்களின் எல்லா நன்மைகளிலும், எல்லா தவறுகளிலும், உமது அன்பிலும் மன்னிப்பிலும் ஆசீர்வதிக்கப்படுவார்களாக. இயேசு கிறிஸ்துவுக்கு சொந்தமாகவும் நெருக்கமாகவும் இருக்க நாங்கள் செபிக்கிறோம். ஆமென்

**Closing Hymn: Mother Dearest Mother Fairest**

Mother dearest, Mother fairest,
Help of all, who call on thee.
Virgin purest, brightest, rarest,
Help us, help, we cry to thee.

Lady, help in pain and sorrow,
Soothe those rack'd on beds of pain,
May the golden light of morrow,
Bring them health and joy again.

Lady, help the absent loved ones.
How we miss their presence here.
May the hand of Thy protection
Guide and guard them far and near.

Chorus

**Mary, help us, help we pray.**
**Mary, help us, help we pray.**
**Help us in all care and sorrow.**
**Mary, help us, help we pray.**